2009 ஜூலை 2]

நீங்கள் மனு கொடுக்கலாம். அப்புறமும் ஒரு 30 நாட்கள் அவகாசம் கொடுக்கிறோம். அதற்குப் பின்னால்தான் இவை தவறான கார்டுகள், முறையற்ற கார்டுகள் என்று நீக்கி வைக்கிறோமேயொழிய, கார்டுகளையெல்லாம் cancel பண்ணிவிட்டால், மறுபடியும் புதிய கார்டுகளை அரசாங்கம்தானே கொடுத்தாக வேண்டும்? அதனாலே ஒரு வழிமுறையைச் செய்கிறோம். ஏதாவதொரு வழிமுறையைக் கடைப்பிடித்தால்தான், தவறான கார்டுகள் களையப்படும். எனவே, நியாயமான கார்டுகளை, இந்த அரசாங்கத்தைப் பொறுத்த அளவுக்கு, இரத்து செய்ய வேண்டும் என்பது நோக்கமல்ல. அதுபோன்றிருந்தால் அவை மாவட்ட ஆட்சியரிடத்திலே சொல்லி முறைப்படுத்தப்படும். ஆக, தவறான கார்டுகள் இருந்தால் தொடர்ந்து அவற்றை நாங்கள் நீக்கித்தான் ஆக வேண்டும். அதற்கு வேறு வழியேயில்லை. அதற்கடுத்தபடியாக 10 மாவட்டங்களிலே போட்டுவிட்டோம். அதற்கடுத்து மறுபடியும் அடுத்த மாதம் 14 மாவட்டங்கள் போடுகிறோம். போட்டுத்தான் ஆகவேண்டும். அதற்கெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள் முழு ஒத்துழைப்பை நல்க வேண்டும். ஆனால், உண்மையான குடும்பங்களிலே இருக்கிற கார்டுகளைத் தவிர்க்க வேண்டுமென்பதல்ல இந்த அரசாங்கத்தினுடைய நோக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

77—

நூற்பாலை

***57861—திரு. வை. காவேரி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொங்கணாபுரத்தில் கூட்டுறவு நூற்பாலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கொங்கணாபுரத்தில் கூட்டுறவு நூற்பாலை அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2009 ஜூலை 2

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

திரு. வை. காவேரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி தொகுதி, மிகவும் பின்தங்கிய பகுதியாகும். இங்கு வசிக்கும் மக்கள் விவசாயம் மற்றும் விசைத்தறித் தொழிலைச் செய்து வருகிறார்கள். எடப்பாடி தொகுதிக்குட்பட்ட கொங்கணாபுரத்தில் T.C.M.S. அதாவது, திருச்செங்கோடு வேளாண்மைக் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தினுடைய கிளை உள்ளது. இங்கு தமிழகத்தின் பல மாவட்டங்களிலிருந்தும் அதிகமான பருத்தி விற்பனைக்கு வருகின்றது. நூற்பாலைக்குத் தேவையான மூலப் பொருள் பருத்தி கிடைப்பதால், தொகுதியிலுள்ள தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க கொங்கணாபுரத்தில் ஒரு நூற்பாலை அமைக்க அரசு முன்வருமா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நூற்பாலைகளை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. காரணம், இப்போதிருக்கிற, ஓடிக்கொண்டிருக்கிற 5 நூற்பாலைகளும் நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. பொதுவாக, இன்றைக்கு இந்தியாவிலே மட்டுமல்ல; தமிழகத்திலும் நூற்பாலைகளின் நிலை சரியில்லாத காரணத்தினால், தற்போது அந்த ஆலை அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

திரு. வை. காவேரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூற்பாலைகளெல்லாம் நட்டத்திலே இயங்கி வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். அதேபோல, தனியார் நூற்பாலைகளும் மூடும் நிலையில் இருப்பதாகத் தகவல் வருகின்றது. எனவே, நூற்பாலைகள் என்பது தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கக்கூடிய ஒரு நிறுவனமாக இருக்கின்ற காரணத்தினால், எதனால் நூற்பாலைகள் நட்டத்தில் இயங்குகின்றன என்று அதனை ஆராய்ந்து, ஒரு குழுவை அமைத்து, தனியார் நூற்பாலையாக இருந்தாலும் அல்லது அரசு நூற்பாலையாக இருந்தாலும் அதை

TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூலை 2]

மீண்டும் இயக்குவதற்கு ஏதாவது புதிய திட்டத்தை உருவாக்கி, அந்த நூற்பாலைகளையெல்லாம் இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய அரசாங்கத்தின் பொறுப்பிலே 5 நூற்பாலைகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அவற்றை நவீனமயமாக்கினால்தான் இலாபம் இருக்கும் என்ற உணர்வோடு சுமார் 61 கோடி ரூபாய்க்கு அதற்கு ஒரு திட்டத்தைத் தீட்டியிருக்கிறோம்.

இப்போது இயங்காமல் இருக்கின்ற 5 நூற்பாலைகளில் 'பி' யூனிட்டில் நன்றாக இருக்கிற மெஷின் பகுதிகளை மட்டும் ஓட்டலாம் என்று முடிவு செய்து, அதற்கு ரூ.18 கோடியில் அரசு ஒரு திட்டம் தீட்டியிருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

78—

சுரங்கப்பாதை

***9618—திருமதி பெ. கமலாம்பாள்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் நகரில் காமராஜ் சாலையில் வட்டாட்சியர் அலுவலகம் எதிரே ஒரு சுரங்கப்பாதை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?